செய்த நாணயங்கள், சோழ நாட்டு, ரோம் நாட்டு நாணயங்கள், அரும் பொருள்கள் கிடைத்து இருக்கின்றன. ஆனால் கடல் அகழ் வாராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னால் அதிலே என்ன சிறப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஐ.நா. நாடுகள் அவைக்கு எழுத வேண்டுமென்றால், அந்தத் திட்டத்தின் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறினால் தான் சேர்த்துக் கொள்வார்கள். அதற்கு அடுத்தபடியாக சில பல கருத்துக்களைத் தெரிவித்தால்தான் ஐ.நா. நாடுகள் அவை அதைப் பற்றி நடவடிக்கை எடுக்க முன் வரும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, பூம்புகார் நகரத்தில் பண்டைச் சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையில் கலைக்கூடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அது எப்போது முடிவடைந்து, திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கலைக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. எப்போது திறக்கப்படும், எப்போது முடிவடையும் என்பதற்கான விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. டி. வி. சம்பத் : பேரவைத் தலைவரவர்களே, பூம்புகார் சிறப்பு வாய்ந்த அந்தப் பகுதியில், துறைமுகம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கரிகால் சோழன் காலத்துப் படகுகளும், கப்பல்களும் தான் அந்தக் கரையில் ஒதுங்குமே தவிர இப்போது இருக்கும் கப்பல்கள் அந்தக் கரையில் ஒதுங்குவதற்கு இல்லை. எனவே, அதைக் கடற்கரையைத் துறைமுகம் ஆக்க இயலாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

Demands of Municipal Employees

* 394 *Q*.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether representation was made to the Government on 4th April 1971 on behalf of the Municipal workers on their demands; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையின் கீழ் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நகரசபையில் பணியாற்றும் சிப்பந்திகளுக்குச் சம்பளக் கமிஷன் சிபார்சுகள் அமலாக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும், கீழ்த்தட்டிலுள்ள சிப்பந்திகளுக்கும் அது பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் நேற்றுக் கூறினார் கள். கீழ்த்தட்டு சிப்பந்திகள் அல்லாது மற்றவர்களுக்கும் கொடுப் பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரை நகராட்சியைச் சார்ந்த ஊழியர்களின் சங்கத்தின் சார்பாக 4—1—71 அன்று 11 கோரிக்கைகள் அடங்கிய மனுவை முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து இருக்கிறார்கள். அது நகராட்சி நிர்வாக இயக்குநர் கருத்துரைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அவருடைய கருத்துரை வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, முனிசிபல் நிர்வாகத்திலே இருக்கும் ஊழியர்களில் ஆயா என்று சொல்லக் கூடிய ஒரு தரப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது குறைந்த ஊதியம் கொடுக்கிறார்கள். அவர்களைப் பார்ட்-டைம் ஊழியர்கள் என்று கருதுகிறார்கள். அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கோரிக்கை மனுவோடு இதையும் சேர்த்து ஆராய்ந்து பார்த்து, அவர்களை முழு நேர வேலை ஊழியர்களாக்க வாய்ப்பு இருக்குமா என்று பார்க்கலாம். பகுதி நேர ஊழியர்கள் என்றால் அதற்கான ஊதியங்களைத் தான் பெற முடியும். இவர்களுக்கு எந்த அடிப்படையில் ஊதியம் தருவது என்பது பரிசீலனையில் இருப்பதால், பரிசீலனை முடிந்த பிறகு அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, நகராட்சிப் பணியாளர்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதாக அமைச்சர் கூறினார்கள். அந்தக் கோரிக்கையிலுள்ள விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் தந்து இருக்கிற கோரிக்கைகள் :—

1. சம்பளம், கீழ்நிலை அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற வீதத்தில் நகராட்சி ஊழியர்களுக்குச் சம்பளம் படிகள் மற்ற வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

2. அரிசன, பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு நகராட்சி ஊழியருக்கும் 5 சென்ட் நிலம் வழங்கி அதற்கான விலையை அவரது சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ள வேண்டும்.

3. அந்த நிலங்களில் குறைந்த விலையில் வீடுகள் கட்டித் தர வேண்டும்.

4. நகராட்சி ஊழியர்களுக்கும் தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

5. அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிர்வாக அதிகாரி, நகராட்சி ஊழியர் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

6. வருங்கால வைப்பு நிதித் திட்டத்தை மதுரை நகராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டிக்க வேண்டும்.

7. ஓய்வு பெறும் நகராட்சிப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 ஓய்வு ஊதியத் தொகை வழங்க வேண்டும்.

1971 ஜூலை 23]

8. மதுரை நகராட்சி, மாநகராட்சியாக்கப்பட்டிருப்பதால், சென்னை மாநகராட்சிக்குப் பொருந்தும் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மதுரை மாநகராட்சிக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

9. மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும்.

10. குடிசைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

11. புறம்போக்கு நிலங்கள் ஒப்படை செய்யவேண்டும் என்று 11 கோரிக்கைகள் வைத்து இருக்கிறார்கள். இவை அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றன.

கோரைக்கு விற்பனை வரி விலக்கு

* 403. வினு.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப் பட்டதன் மூலம் அரசு இழக்கும் தொகை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டதன் மூலம் ஒரு ஆண்டில் சுமார் ரூ. 30,000 அரசுக்கு வரி இழப்பு ஏற்படும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, ஏழைகளுக்கு நன்மை செய்யும் இது போன்ற வேறு வரி விலக்குகள் என்ன பொருள்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது? இன்னும் ஏதாவது கைவினைப் பொருள் களுக்கு வரி விலக்கு அளிக்கும் உத்தேசம் உண்டா? கைத்தறித் துணிகளுக்கு அளிக்கப்படும் ரிபேட் போல், இந்தக் கோரைப் பாய்களுக்கும் ரிபேட் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எந்தெந்தப் பொருள்களுக்கு வரி விலக்கு அளித்து இருக்கிறோம் என்று கேட்டார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். ரிபேட் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். இதைத் தொழிலமைச்சரிடம் கேட்கவேண்டும்.

அரிசனங்களுக்கு கிராம அதிகாரிகள் பதவி

* 404. வினு.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் கர்னம், கிராம முன்சீப் முதலிய வேலை களுக்கு அரிசன மக்களுக்கு விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்கப் படுகிறதா?

(இ) இல்லை எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) தற்பொழுது உள்ள விகித முறையில் சலுகை காட்ட வாய்ப்பு இருப்பதால் விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்க அவசிய மில்லை.